# பொதுக்காலம் 28 ஆம் ஞாயிறு

## திருவழிபாடு ஆண்டு - A

2020-10-11

**இன்றைய வாசகங்கள்:**

இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம் 25: 6-10,
திருப்பாடல் 23: 1- 6,
திருத்தூதர் பவுல் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம் 4: 12-14, 19-20,
மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 22: 1-14

## திருப்பலி முன்னுரை:

என் தலைவராகிய ஆண்டவர் எல்லா முகங்களிலிருந்தும் கண்ணீரைத் துடைத்து விடுவார்:

அன்புமிக்க சகோதர சகோதரிகளே! இயேசுவே ஆண்டவர் என்னும் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள். இன்று பொதுக் காலம் இருபத்தெட்டாம் ஞாயிறு. சாவை ஒழித்து, பசும்புல் வெளிமீது நம்மை இளைப்பாறச் செய்யும் ஆண்டவரின் சந்நிதானத்தில் ஒன்று கூடியுள்ளோம்.

ஆண்டவரின் அருள் நலமும் பேரன்பும் நம்மைப் புடைசூழ்ந்துவரும்: நாம் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ இறைவன் நமக்கென்று பலவற்றை தயாரித்து வைத்திருக்கின்றார். நாம் அச்சம் அகற்றி நம்பிக்கையோடு வாழ, என்றும் இறைவன் நமக்கு அருகிருந்து நம்மை வழிநடாத்துகின்றார். வலுவும், ஆற்றலும் அளித்து அவர் நம்மைப் பாதுகாக்கின்றார். இந்த உண்மைகளை இன்றயை இறைவார்த்தைகள் உறதிப்படுத்துகின்றன. ஆகவே நாம் அனைவரும் ஆண்டவரை நம் ஆயனாக ஏற்று, அவரே நமக்கு வலுவூட்டு கின்றவர், எல்லா முகங்களிலிருந்தும் கண்ணீரைத் துடைத்து விடுபவர் என்பதை ஆழமாக விசுவசித்து அவர் காட்டும் வழியைப் பின் தொடர வரம் கேட்டுத் தொடரும் பலியில் பங்கேற்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.
பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**அன்பின் அரசரே இறைவா,**
உம் திருஅவை உள்ள அனைத்து தரப்பினரும் எதையும் எதிர்பார்க்காத இயேசுகிறிஸ்துவின் மனநிலையைக் கொண்டு தங்கள் வாழ்விலும், ஏற்றப் பணிகளிலும் சிறந்த விளங்க தேவையான அருளைப் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**என்றென்றும் எமக்குத் துணைசெய்யும் தந்தையே!**
வேதனைகளோடும், விரக்தியோடும், கண்ணீரோடும் வாழும் அனைவர்மீதும் மனமிரங்கி அவர்களின் துயரினை அகற்றி அவர்கள் மகிழ்சியோடும், உடல் நலத்தோடும், அமைதியோடும் விடுதலை பெற்று வாழ்ந்திடச் செய்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**விண்ணுலகினின்று கண்ணோக்கிப் பார்க்கும் தந்தையே இறைவா!**
இன்று கவலை, நோய், துன்பம் போன்ற வற்றிலிருந்து விடுதலை பெறத் தவித்துக் கொண்டிருக்கும் அனைத்து மக்களும் நீர் கொடுக்கின்ற ஆறுத லைப் பெற்றுக் கொள்ளவும், இயற்கை, செயற்கை அழிவுகளிலிருந்து அவர்களைப் பாதுகாத்திடவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நலமும் வளமும் தந்தருளும் எம் இறைவா!**
எங்கள் மாணவசெல்வங்கள் அனைவரும் இந்த தொற்று நோய்காலத்தில் பள்ளிக்கு சென்று கல்வி பயிலும் முறையின்றி கூண்டுக்குள் அடைப்பட பறவை போல தத்தளிக்கும் மனநிலையிலிருந்து விடுபடவும், அதற்கு ஏற்றநிலையை விரைவில் உருவாக தேவையான ஞானத்தையும், சக்திகளையும் அனைவரும் பெற்று மகிழ்வுடன் வாழ வேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகின்றோம்.

**பரிவுள்ளம் உடையவரான தந்தையே இறைவா!**
எம் குடும்பங்களில் உள்ள அனைவரும் வார்த்தையால் மட்டுமல்ல, செயலாலும் உமது திருவுளத்தை நிறைவேற்றி வாழவும், சிறப்பாக, ஏழைகள் மீது அக்கறை கொண்டு, அவர்களது நல்வாழ்வுக்காக உழைக்கவும் இவ்வாறு எங்கள் வாழ்வுப் பிறர்க்கு எடுத்துக்காட்டாக அமையவும் உமதருள் வேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகின்றோம்

**எம் குற்றங்களையும், குறைகளையும் நினையாத எம் இறைவா!**
இந்தத் தொற்றுநோய் காலத்தில் உமது மக்களாகிய நாங்கள் படும் துன்பங்களை நீர் அறிவீர். விரைவில் நாங்கள் இதிலிருந்து விடுபடவும், அனைவரும் மீண்டும் தம் வளமையான வாழ்விற்குத் திரும்பத் தேவையான சூழலைத்தர வேண்டியும், மாணவச்செல்வங்கள் நல்ல மனநிலையும், ஞானத்தையும் பெற்று நிம்மதியாகக் கல்விக் கற்றுத் தேர்ந்திடவும் உமது அருளைப் பொழியுமாறு இறைவவா உம்மை மன்றாடுகிறோம்.

**நலம் அளிக்கும் வல்லவரே! எம் இறைவா!**
தொற்றுநோயின் தாக்கத்திலிருந்து எங்களைக் காத்துவந்தவரே, நோயின் வீரியம் குறைந்து மக்கள் அனைவரும் நலமுடனும், வளமுடனும் வாழத் தேவையான அருளையும், குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அனைவரும் தொற்றுநோயினால் ஏற்பட்ட மனஅழுத்தத்திலிருந்து விடுபடவும் தேவையான நல்ல சுகாதார, வளமான நல்ல சூழ்நிலையைத் தரவேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகிறோம்.